இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை சட்டத்தின் 32(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 119 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 6,054,415 தொகைக்கான முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கங்கள் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் கடந்த ஆண்டில் இருந்து முன்கொண்டுவந்திருந்த மீதிக்கு சீராக்கல் மேற்கொண்டு காட்டுவதற்கு பதிலாக காலப்பகுதிக்கான சீராக்கல் ஒன்றென காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

(i) செயற்பாட்டு தொழிற்பாடுகளின் மூலம் உருவாக்கிய காசுப் பாய்ச்சலுக்கு சேர்க்கப்பட வேண்டிய காணி ஒன்று தொடர்பாக பதிவழிக்கப்பட்டிருந்த லீஸின் தொகை ஆகிய ரூபா 473,480 இற்கான பெறுமதி காய்ச்சுப்பாய்ச்சல்கூற்றில் கழித்து காட்டியிருந்ததுடன் ஆண்டிற்கான பணிக்கொடைச் செலவு ஆகிய ரூபா 1,025,423 இற்கான பெறுமதி காசுப்பாய்ச்சல்கூற்றில் சீராக்கல் செய்திருக்கவில்லை.

(ii) காசு செயலாற்றுகைக் கூற்றில் அகல விரிவான பகுதியில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முன்னைய காலப்பகுதிக்கான சீராக்கங்கள் ரூபா 6,054,475 தொகை மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் சீராக்கல் செய்திருந்த மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 186,456 தொகை காசுப்பாய்ச்சல்கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iii) தேசிய விஞ்ஞான மன்றத்தில் இருந்து மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 4,115,848 தொகை மற்றும் அந்த நிதியில் இருந்து ஆய்வுகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 184,149 இற்கான தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் வெவ்வேறாக காட்டுவதற்கு பதிலாக மீதித் தொகை ஆகிய ரூபா 3,931,699 இற்கான பெறுமதியை மூலதன அசைவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(iv) நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த 3 மீதிகளுக்காக நாள்வழிக்குறிப்பு மூலம் மேற்கொண்டிருந்த ரூபா 4,214,000 இற்கான சீராக்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு இலாபத்திற்கு சீராக்கல் செய்வதற்கு பதிலாக தொழிற்பாட்டு மூலதன அசைவின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03**

கடந்த ஆண்டுகளில் செலவுகள் என இனங்கண்டிருந்த பயிற்சிப் பாடநெறிகளில் பயன்படுத்தப்படும் இரத்தினக் கற்களின் கிரயம் ரூபா 519,800 தொகை மீளாய்வாண்டு முதல் சொத்துக்கள் என இனங்கண்டிருந்த போதிலும், கணக்கீட்டு கொள்கைகளில் ஏற்பட்டிருந்த இந்த மாற்றங்கள் நியமத்தின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 45,198,453 தொகைக்கான கிரயத்தையுடைய நடைமுறை அல்லாத சொத்துக்கள் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையல்லாத சொத்துக்களின் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 1,045,231 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 18,608 தொகை பெறுமதியான இரத்தினக் கற்கள் மற்றும் ரூபா 237,590 பெறுமதியுடைய நுகர்வுப் பொருட்களின் இருப்பு நிதிக்கூற்றுக்களுக்கு எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான கட்டிட வாடகைச் செலவு ரூபா 248,388 தொகை மற்றும் நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் ரூபா 8,851 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) உத்தியோகத்தர்களிடம் பெற்றிருந்த திருப்பி செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புக்கள் ரூபா 10,000 தொகையினை திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டுள்ளது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

இரத்தினக்கல் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு பயிற்சி வழங்கும் செயற்திட்டத்தின் செயற்பாட்டு செலவுகளில் தேசிய இரத்தினக்கல் ஆபரணங்கள் அதிகார சபையில் இருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டிய தொகை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயற்சி நிறுவனத்தின் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 5,936,817 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 6,654,479 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 717,662 இற்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

5 உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பிரயாணம் தொடர்பாக செலவிடப்பட்டிருந்த ரூபா 841,241 இற்கான உரிய கொடுப்பனவு பண உறுதிப்பத்திரம் மற்றும் உறுதிப்படுத்தல் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஜூன் 30 திகதி சேவையில் இருந்து விலகியிருந்த ஊழியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 123,497 இற்கான ஊழியர் கடன் மீதி மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) பாடநெறிகளைப் பூர்த்தி செய்திருந்த 12 மாணவர்கள் தொடர்பான ரூபா 24,000 தொகைக்கான திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் திருப்பி செலுத்தியிருக்கவில்லை.

(இ) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையில் இருந்து பெற வேண்டியவை என ரூபா 6,654,479 தொகை நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இந்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மீதியொன்று காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமை த்துவங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 | 2 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 396 | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 216,325 தொகை பெறுமதியான 31 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1978 இன் திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் பெற்றிருந்த ரூபா 817,033 தொகைக்கான நுகர்வுப் பொருட்கள் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 101 முதல் 109 வரை மற்றும் 760 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆண்டில் முடிவடைந்த ஆண்டின் போது நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,311,124 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,587,711 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,898,835 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீண்டுவரும் செலவுகளுக்கான திறைசேரி மானியம் ரூபா 3,813,000 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் வேதனம் ரூபா 8,065,113 இனால் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவு ரூபா 3,255,677 இனால் அதிகரித்தல் நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, நிறுவனம் 2014 மற்றும் 2016 ஆண்டிடுகளின் போது மிகையொன்றை அறவிக்கப்பட்டிருந்த போதிலும், 2013, 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் பற்றாக்குறை ஒன்று காணப்பட்டது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டில் ரூபா 26,882,287 இற்கான நிறுவனத்தின் பங்களிப்பு, மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 66,179,762 தொகை வரை இடையறாமல் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் 2017 – 2021 காலப் பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவனம் ஆரம்பிக்கும் போது ஏற்படுத்தியிருந்த ஒவ்வொரு குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் 5 வருடங்களுக்கான திட்டங்கள் வெவ்வேறாக காட்டியிருக்கவில்லை.

(ii) திட்டங்கள் தயாரிக்கும் போது இனங்கண்டிருந்த நிறுவனத்தின் சக்தி மற்றும் பலவீனங்களும், நிறுவனத்தின் சுற்றாடலிலுள்ள சந்தர்ப்பங்கள் சவால்களை சிறந்த முறையில் மதிப்பாய்வு செய்து குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொருத்தமான தந்திரோபாயங்கள் தீர்மானித்திருக்கவில்லை.

(iii) ஒவ்வொரு குறிக்கோள்கள் தொடர்பாகவும் ஒவ்வொரு காலத்திலும் நெருங்க வேண்டிய இலக்குகளை பூர்த்தி செய்யும் பொறுப்பு செயற்பாட்டு மட்டம் வரை தர்க்க ரீதியான அடிப்படையில் பகிரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த நிறுவனத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்காததுடன் மனித வளங்கள் மற்றும் நிருவாகம் ஆய்வுகள் மற்றும் பயிற்சி வழங்கள் பிரிவுகளுக்காக மாத்திரம் பிரிவிற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. பயிற்சி வழங்கல் பிரிவின் பாடநெறி வருமானம் திட்டங்களில் உட்படுத்தியிருக்கவில்லை.

(இ) பயற்சி வழங்கல் பிரிவின் 4 பிரதான செயற்பாடுகளின் கீழ் ரூபா 37,200,000 தொகை செலவிடப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்களுக்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும், அச் செயற்பாடுகளின் கீழ் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகையை காட்டும் செயலாற்றுகை அறிக்கை தயாரித்திருக்காமையால் அதற்குரிய செயலாற்றுகையை கணக்காய்வில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

#### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கையில் இரத்தினப் படிவுகளை தேடுதல் மற்றும் மதிப்பாய்வு செய்யும் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிப்பட்டன.

(i) செயற்திட்டத்தினால் எதிர்பார்த்த செயலாற்றுகையை நெருங்கக்கூடிய விதமாக திட்டமிட்டல் மற்றும் அமுல்நடாத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக 2009 – 2011 காலப்பகுதியில் 18 மாவட்டங்களில் 46 பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2017 ஆண்டு வரையான காலப்பகுதியில் மொனறாகலை மாவட்டத்தில் 09 பிரதேச செயலக பிரிவுகளில் மாத்திரம் இரத்தினக்கல் படிவுகள் தேடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் செயற்திட்டதிற்காக 2017 ஆண்டு வரை ரூபா 21,973,348 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) கதிர்காமப் பிரதேச செயலகப் பிரிவில் இரத்தினக்கல் மறைத்துள்ள இடங்கள் தொடர்பான வரைபடங்கள் தொடர்ந்தும் தயாரிக்கப்பட்டு வருவதுடன் 6 பிரதேச செயலக பிரிவுகளுக்கு இரத்தினக்கல் மறைத்திருக்கும் இடங்களில் வரைபடங்கள் மற்றும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவை அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்றின்படி தயாரித்திருக்கவில்லை. இதன் காரணமாக நிலஅளவை திணைக்களத்தின் உதவியை பெற்று அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை ஒன்றின் பிரகாரம் வரைபடங்களை தயாரித்தல் 2017/2018 ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியாகிய 26 பேர் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையின் மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களைக் கொண்டு நிரப்பிக் கொள்வதற்கும், அதற்காக சம்பளத்திற்கு மிகையாக 50 சதவீத கொடுப்பனவு ஒன்று செலுத்துவதற்கும். ஆலோசகர்கள் பதவிக்காக மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் வெளியில் இருந்து சேர்ப்பதற்கும், 2009 ஜுலை 14 திகதி முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் இரத்தினக் கல் மற்றும் ஆபரங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 12 ஊழியர்கள் மற்றும் வெளி ஆலோசகர் ஒருவர் மாத்திரம் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(iv) செயற்திட்டத்தை அமுல்நடத்துவதற்காக அத்தியாசிமானவை என பிரேரணையில் காட்டப்பட்டிருந்த சிரேஷ்ட நிலவியலாளர், நிலவியலாளர், துணை இயக்குனர், ஆய்வு உதவியாளர், ஆய்வுகூட உதவியாளர் மற்றும் தகவல் முறைமை உதவியாளர் இன்றி செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(v) செயற்திட்ட பிரேரணையில் அடங்கியிருக்காத கணக்காளர் மனித வள முகாமையாளர் மற்றும் கணக்கு எழுதுனர் ஆகிய ஊழியர்களுக்கு செயற்திட்ட விடயங்களுக்காக சம்பளத்தை 20 சதவீத கொடுப்பனவு ஒன்று மற்றும் திட்டமிடுபவர் மற்றும் மூன்று தொழிலாளர்களுக்காக சம்பளத்தில் 50 சதவீதமான கொடுப்பனவு ஒன்று திறைசேரியின் அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது.

(vi) 2017 முதல் 2031 வரை 3 கட்டடங்களின் கீழ் ரூபா 300.65 மில்லியன்களுக்காக கிரயத்துடன் செயற்படுத்தப்பட்ட இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 48 மில்லியன் நிறுவனத்தினால் உறுவாக்கிய வருமானத்திலிருந்து மற்றும் 2016 நவம்பர் 22 திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 2017/2021 காலப்பகுதிக்காக ரூபா 76.5 மில்லியன் திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்வதற்காக திட்டமிட்டிருந்தது. மீதித் தொகையாகிய ரூபா 176.15 மில்லியன் கணிப்பீட்டின் போது இனங்காணப்படும் இரத்தினக்கல் காணிகள் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் ஏலவிற்பனையின் போது கிடைக்கும் வருமானத்திலிருந்து 25 சதவீத தொகையில் இருந்து மற்றும் இரத்தினக்கல் மறைத்துள்ள இடங்களை காட்டும் வரைபடங்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருந்து தீர்ப்பதற்கு இலக்காக இருந்தது. எவ்வாறாயினும், அதற்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையுடன் உடன்படிக்கைகளுக்கு அனுகுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆய்வு பகுதியில் செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 8 பிரதான செயற்பாடுகளுக்காக ரூபா 13,250,000 தொகை செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 7,225,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. அங்கு ரூபா 300,000 ஒதுக்கப்பட்டிருந்த 2 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் 6 செயற்பாடுகளில் நிதிச்செயலாற்றுகை 38 சதவீத்தை விட குறைவாக இருந்தது.

(ii) 4 பகுதிகள் மேம்படுத்தல் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்துவதற்காக திட்டமிடப்பட்டு ரூபா 400,000 தொகை செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வேலைகளை நிறைவேற்றாமல் கண்காட்சிகள் நடத்துதல், புத்தகம் ஒன்று அச்சிடுதல், அதி தொழில்நுட்ப உபகரணங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்துதல், செய்தித்தாள் கடிதங்கள் வெளியிடுதல் ஆகிய திட்டமிடப்படாத கருமங்களுக்காக ரூபா 1,386,300 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iii) மனித வள மற்றும் நிருவாக மற்றும் ஆய்வுப் பிரிவுகளின் செயலாற்றுகை அறிக்கைகளின் பௌதீக செயலாற்றுகை காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) பயிற்சி பாடநெறிகள் நடாத்துதல் செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பயிற்சி பாடநெறிகளுக்காக கல்வி நாள்காட்டி மற்றும் முறையான திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த 1,200 தொகையான மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் 201 பேர் பாடநெறிகளை விட்டுச்சென்றுள்ளனர். பிங்கிரிய பயிற்சி நிலையத்தில் ஒரு பாடநெறி மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக சேர்க்கப்பட்டிருந்த 12 மாணவர்களில் 10 பேர் பாடநெறியை விட்டு சென்றிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் பயிற்சி நிலையம் மூடப்பட்டுள்ளது.

(iii) ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பயிற்சி நிலையங்கள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) செயல் நடவடிக்கை திட்டத்தில் காணப்படாத இரண்டு பாடநெறிகளுக்காக 133 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

(ஈ) நிறுவனம் நிறுவப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

நிறுவனம் நிறுவப்பட்ட குறிக்கோள்களிடையே இரத்தினக்கல் கனியம் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மற்றும் ஆய்வு ஒன்று மேற்கொள்வதன் மூலம் இனங்காணப்பட்ட இரத்தினக்கல் படிவு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு திரட்டிக் கொடுத்தல். கைத்தொழிலின் அபிவிருத்திக்காக இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் உட்பட ஆலோசனைகள் வழங்கல் மற்றும் பெறுமதியை அதிகரிக்கும் நடைமுறைகள் மற்றும் கண்டுபிடித்தலை பிரபலப்படுத்தி கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக நிறுவனத்தின் பங்களிப்பு குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டணம் அறவிடப்பட்டு கெவுட வெப்பமூட்டல் செய்து கொடுக்கல் பொதுமக்கள் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் சேவையினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமையின் காரணத்தினால் ஆண்டின் போது அவற்றிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 20,000 மாத்திரம் காணப்பட்டது.

(ஆ) நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் 2007 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,395,749 தொகைக்காக தங்கம் மற்றும் வெள்ளி மோசடி ஒன்று தொடர்பாக மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,495,749 தொகையினை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2009 முதல் 2014 வரை ஆண்டுகள் தொடர்பாக சம்பளம் அதிகரிப்பு மற்றும் படிகள் என நிறுவனத்தினால் ஊழியர்களுக்கு அதிகரித்து மேலதிகமாக கூட்டுப் பெறுமதி ரூபா 2,151,320 இற்கான தொகை அவ்வாறு திருப்பி அறவீடு செய்தல் 2016 மார்ச் வரையும் செய்திருக்கவில்லை. 2016 மார்ச் 29 திகதி நிறுவனத்தின் தலைவரின் தீர்மானத்தின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 119 இற்கு முரணாக குறிப்பிட்ட ஊழியர் ஓய்வு பெறும் திகதி வரை ரூபா 50 உம் ரூபா 1,942 இற்கு இடைப்பட்ட மாதாந்த தவணைகளாக அறவீடு செய்தவற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மீளாய்வாண்டு இறுதி அளவில் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 1,925,086 தொகையாக காணப்பட்டது. ரூபா 619,646 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்த உத்தியோகத்தர் ஒருவர் 2015 ஆண்டின் போது வேறு நிறுவனமொன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தமையால் அந்த நாள் முதல் அப்பணம் அறவீடு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை.

**4.3 நிதியக் குறைபயன்பாடு**

கெவுட வெப்பமூட்டுவது தொடர்பாக ஆய்வுகளுக்காக தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ரூபா 4,115,848 தொகை 2017 ஏப்ரல் 27 திகதி கிடைத்திருந்த போதிலும் அது தொடர்பான விடயங்கள் ஒன்றும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் ஆண்டு இறுதியில் ஊழியர் செலவுகளுக்காக ரூபா 184,149 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெவுட வெப்பமூட்டித் திருத்துவதற்கான ஆய்வு அலுவல்களுக்காக ரூபா 10,977,344 தொகை செலவிடப்பட்டு 2013 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த அதி உஷ்ண மின் அடுப்பு அந்த நாள் முதல் கணக்காய்வு திகதியாகிய 2018 ஜூலை 31 திகதி வரை எந்த தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தில் காணப்பட்டது.

(ஆ) 2007 ஆண்டின் போது ரூபா 12,309,013 தொகை செலவிடப்பட்டு பூமி துலைக்கும் இயந்திரத்திற்காக 2016 ஆண்டு வரை காப்புறுதிக்காக ரூபா 1,064,622 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், நிறுவனத்தின் கருமங்களுக்காக பயன்படுத்த முடியாதிருந்த காரணங்களினால் 02 வருடங்களை விட மிகையான காலம் அந்த இயந்திரம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(இ) 2009 ஆண்டின் ரூபா 5,974,375 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த கெப் வண்டியை திருத்தி பயன்படுத்துவது சிக்கனமற்றதாக இருந்ததால் 2016 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தாமல் காணப்படுகின்றது.

**4.5 பதவியணி நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிணி ஆகிய 135 இல் 47 அதாவது 35 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டதுடன் 08 வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்ட பணிப்பாளர் (ஆய்வு) பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஜூலை 31 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகப் பதவிக்காக 2016 ஜனவரி 01 முதல் ஒப்பந்த அடிப்படையில் அலுவலர் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

(இ) பதவிக்காக நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் வழங்கும் விரிவான நடைமுறை ஒன்று முதலில் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு அவர்களின் விருப்பத்தின் பிரகாரம் செயற்படுதவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. உதவிப் பணிப்பாளர்(மனித வள), உதவிப் பணிப்பாளர் (இரத்தின விஞ்ஞானம்), பயிற்சி வழங்கும் உத்தியோகத்தர்(ஆபரணங்கள் வடிவமைப்பு) ஆகிய பதவிகளுக்காக ஆட்கள் சேர்க்கும் போது நேர்முகப் பரீட்சை புள்ளிகள் வழங்கும் செயற்பாடு வெளிப்படைத்தன்மை சவாலுக்கு இலக்காகியுள்ளது.

(ஈ) நிறுவனத்தின் சாரதி ஒருவர் உரிய அங்கீகாரம் இன்றி 2015 ஆண்டு முதல் சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு கணக்கீடு விடுவிக்கப்பட்டிருந்தார்.

**5 நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்**

2017 ஆகஸ்ட் 14 திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 இலக்கம் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக அறிந்திருக்காமையால் அக் கருமம் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய இலக்குகள் அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்கண்டிருக்கவில்லை.

**6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வின் பிரிவுக்காக உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் கணக்காய்வு உதவியாளர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தார்.

(ஆ) 2009 ஜுன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(1) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் வருடம் தொடங்குவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் 2017 மே 30 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் திட்டமிட்டிருந்த 20 கணக்காய்வு விடயங்களில் 07 விடயங்கள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலைச் செயற்பாடு

### 6.2.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுனத்தின் பெறுகைத்திட்டம் விரிவாக தயாரித்திருக்காததுடன் பெறுகைகள் வழிகாட்டல் கோவை 4.2.2 இன் பிரகாரம் பெறுகை நேர அட்டவணை ஒன்று தயாரித்தும் இருக்கவில்லை. அதேபோல் பெறுகைகள் திட்டம் பாதீட்டிற்கு இணங்க தயாரித்து அல்லது நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதன பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 40.1 மில்லியன் இற்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்திருந்தது ரூபா 20.4 மில்லியன் தொகை அதாவது அவற்றின் 50.8 சதவீத பண்டங்கள் மாத்திரமே. இங்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டிய பயிற்சி வழங்கல் மற்றும் ஆய்வு பிரிவுகளின் பெறுகைகளில் ஆண்டின் போது நிறைவேற்றியிருந்தது 53 சதவீதம் மற்றும் 35 சதவீதம் அளவாகக் காணப்பட்டதுடன் ரூபா 500,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்திருக்கவில்லை.

(இ) கணிணிகள் மற்றும் மென்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2.3 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொகையை 62 சதவீதத்தினால் மிகைத்து ரூபா 3.7 மில்லியன் இற்கு கொள்வனவு செய்தல் நடைபெற்றுள்ளது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே 15 சதவீதம் முதல் 373 சதவீதம் வரையான வீழ்ச்சில் முரண் ஒன்று அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.4 வருடாந்த அறிக்கை சபையில் சமரபித்தல்

2015 மற்றும் 2016 ஆண்டுகளின் வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வு திகதியாகிய 2018 ஜுலை வரையும் பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

## 7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) வெவ்வேறாக காணப்பட வேண்டிய செலவு விடயங்கள் ஒன்றாக கூட்டி மற்றும் வட்டி வருமான 3 கணக்குகில் ஒரே கணக்கால் காட்டுதல் |
| | | (ii) அட்டுறு செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்யாமை. |
| (ஆ) | பெறுகை அலுவல்கள் | (i) பெறுகைகள் திட்டம் விரிவானதாகவும் பாதீட்டுக்கு இணங்க தயாரித்திருக்க வில்லை. |
| | | (ii) திட்டத்தின் பிரகாரம் செயற்படாமை மற்றும் தேவைகளை பகுப்பாய்வு செய்யாமல் பெறுகை திட்டமிடப்பட்டிருந்தது. |
| | | (iii) கொள்வனவு மற்றம் ஒப்பந்த வேலைகளை வழங்குவதற்கு முன்னர் பின் தகைமைப் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | கோவைகள் பேணல் மற்றும் பாதுகாப்பு பொறுப்பு | (i) உத்தியோகத்தர்களினால் கோவைகள் முறைப் பிரகாரம் நடத்தியிருக்காமை மற்றும் அவற்றின் பொறுப்பு உரிய முறையில் உத்தியோகத்தர்களுக்கு சாட்டியிருக்காமை. |
| | | (ii) உத்தியோகத்தர் வெளிநாட்டுக்கு செல்லல் தொடர்பாக தகவல்கள் அடங்கிய கோவைகள் வெவ்வேறாக பராமரிப்பதற்கு மற்றும் கொடுப்பனவு விபரங்கள் வெவ்வேறாக பேணப்பட்டிருக்காமை. |
| (ஈ) | பரீட்சைகள் நடாத்துதல் | முறையான திட்டமிடல் இன்றி பரீட்சைகள் நடாத்துதல், பாடநெறி சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்கும் நடைமுறை ஒன்று தயாரித்திருக்காமை மற்றும் பரீட்சை மேற்பார்வையாளர்களாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை நியமனம் செய்யாமை. |
| (உ) | வாகனப் பயன்பாடு | வாகனங்களின் ஓட்ட அட்டவணைகளில் பயன்படுத்திய உத்தியோகத்தர்களினால் கையொப்பமிட்டிருக்காமை, எரிபொருள் சீர்செய்தல் மற்றும் பிரயாணம் செய்த தூரத்தை பதிவு செய்து சாரதியை கையொப்ப மிட்டிருக்காமை. |
| (ஊ) | செயலாற்றுகை அறிக்கை | பணிப்பாளர் சபையினால் செயலாற்றுகை அறிக்கை காலத்துக் பொருத்தமான மீளாய்வு செய்யாமை. |